## e-கல்வி திட்டம் - ஏன் , எங்கு , எப்படி

கல்வியின் முக்கியத்துவம் பற்றி அறியாதவர்கள் அகிலத்தில் மிக அரிது. இலங்கை சுதந்திரமடைந்த காலப் பகுதியில் (~1948) ஈழத்தமிழர்கள் கல்வியில் சிறப்புற்று இருந்தார்கள். குறிப்பாக வடக்கில் பல கல்லூரிகள் நிறுவி, உயர் கல்வி பெற்று மேம்பட்டனர். தமிழர்கள் கல்விக்கு வழங்கிய முக்கியத்துவம், அவர்களின் புலமைசார் மரபு ஆகியவை அவர்கள் கல்வியில் சிறப்புற ஏதுவாக்கின. ஆனால் தமிழர் செறிந்து வாழும் பிரதேசங்களில் போரின் பின்னரான கல்வி நிலை மிகவும் கவலைக்கிடமாகியுள்ளது. கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தர (க. பொ. த (சா/த))ப் பரீட்சைகளின் அடிப்படையில் வடமாகாணம் கடந்த நான்கு வருடங்களாக இறுதி நிலையான 9ஆவது இடத்திலும், கிழக்கு மாகாணம் 8ஆவது இடத்திலும் இருந்து வருகின்றது. இது மாத்திரமல்லாமல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களின் விகிதாசாரம் படிப்படியாகத் தேய்வடைந்து இப்பொழுது 50%ஐ தொட்டு விட்டது.

தமிழ் பிரதேசங்களில் கல்வியை உயர்த்தும் நோக்கோடு 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட e-கல்வி திட்டம் 25 e-கல்வி நிலையங்களை எட்டியுள்ளதுடன் கடந்த க. பொ. த (சா/த) பரீட்சையில் பல நிலையங்களில் மாணவர்கள் 100% சித்தியை எய்தியுள்ளனர்.

தேசிய மட்டத்தில் கல்வியின் கணிப்பீட்டுக்கருவியாக க. பொ. த (சா/த) பரீட்சை உள்ளது. கடந்த பரீட்சை முடிவுகளின்படி, நாட்டில் உள்ள ஒன்பது மாகாணங்களில் வடமாகாணம் தொடர்ந்து நான்காம் முறையாக ஒன்பதாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருப்பது பலதரப்பினர் மத்தியிலும் கவலையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கின்றது. வடமாகாணத்தைச் சேர்ந்த 12 கல்வி வலயங்களினதும் செயற்திறன் தேசிய சராசரியை விட மிகவும் குறைவாகவே இருக்கின்றது. 2017 இல் நடைபெற்ற பரீட்சையின் அடிப்படையில் இலங்கையில் சராசரியாக 73% மாணவர்கள் உயர்தரத்திற்குத் தகுதி பெற்றுள்ளார்கள். ஆனால் வடமாகாணத்தில் முதலாவதாக வந்துள்ள யாழ்ப்பாண கல்வி வலயத்தில் 68% மாணவர்களே உயர்தரத்திற்குத் தகுதி பெற்றுள்ளார்கள். தீவுப்பகுதி, துணுக்காய் மற்றும் கிளிநொச்சி வலயங்களில் 50% இற்கும் குறைவான மாணவர்களே உயர்தரத்திற்குத் தகுதி பெற்றுள்ளார்கள். கல்வியில் முதல் மாகாணமாக காணப்பட்ட வடமாகாணம் 2010 இன் பின் எப்படி சீரழிந்து செல்கின்றது என்பதையும் தென் மாகாணம் எப்படி ஒரேசீராக வளர்ந்து செல்கின்றது என்பதையும் fig.1 இல் உள்ள வரைபு தெளிவாகக் காட்டுகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில் வெளிவந்த எல்லா மாகாணங்களினதும் க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள் fig.2 இல் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் ஏறக்குறைய 623 பேர் கடந்த வருடமும் எல்லா பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளதையும் இது ஏறக்குறைய 3.5% வீதமாகவும், இலங்கையிலேயே அதி கூடியதாகவும் இருப்பது மிகவும் கவலைக்கிடமான விடயம் ஆகும்.




Fig.1: கல்விப் பொது தராதர உயர் தரத்திற்குத் தகுதி பெறும் மாணவர்களின் வீதம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தென்மாகாணத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளது.




Fig.5: கடந்த 8 வருடங்களில் யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள உயிரியல் விஞ்ஞானத் துறையில் எவ்வாறு தமிழ் மாணவர் வீதம் குறைந்து செல்கின்றது என்பதை இவ்வரைபு காட்டுகின்றது. தற்பொழுது தமிழ் மாணவர்களின் வீதம் 33% ஆக காணப்படுகின்றது.

Fig.6: கடந்த 5 வருடங்களில் யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள பொறியியல் துறையில் எவ்வாறு தமிழ் மாணவர் வீதம் குறைந்து செல்கின்றது என்பதை இவ்வரைபு காட்டுகின்றது. தற்பொழுது தமிழ் மாணவர்களின் வீதம் 39% ஆக காணப்படுகின்றது.




கல்வி பொது தராதர (சா/த) கணித விஞ்ஞான பாடங்களில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சியும் அதன் விளைவாக க.பொ.த (உ/த) இல் கணித விஞ்ஞான பாடங்களில் குறைந்த தொகை மாணவர்கள் கற்பதுமே இந்த வீழ்ச்சிக்கு காரணமாக சொல்லப்படுகின்றது. இந்நிலையை அவசரமாக சீர்செய்யாது விட்டால் யாழ் பல்கலைக்கழகம் எமது கையைவிட்டு விரைவில் போய்விடும் என்பது நிச்சயம்.

மேற்கூறப்பட்ட காரணிகளை கருத்தில் கொண்டு பின்வரும் நோக்கங்களுக்காக 2016 ஆம் ஆண்டு தமிழர் வாழும் பிரதேசங்களில் e-கல்வி திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

1. க.பொ.த (சா/த) இல் சித்தியடைந்து உயர்தரத்திற்குத் தகுதி பெறும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

2. கிராமப்புறங்கள், எல்லைக்கிராமங்கள் மற்றும் மலையகத்தில் பெருமளவாகக் காணப்படும் கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர் தட்டுப்பாட்டை e-கல்வி திட்டத்தின் மூலம் ஈடு செய்தல்.

3. உயர் தரத்தில் கணித விஞ்ஞான பாடம் சார்ந்த துறைகளை மாணவர்கள் தேர்ந்தெடுப்பதை ஊக்குவித்தல்.

Fig.2: கடந்த 2 வருடங்களில் இலங்கையின் 9 மாகாணங்களினதும் கல்விப் பொது தராதர உயர் தரத்திற்கு தகுதி பெறும் மாணவர்களின் வீதம் இவ்வரைபில் காட்டப்பட்டுள்ளது.




தமிழர்களின் முக்கியமான சொத்துக்களில் ஒன்றான யாழ் பல்கலைக்கழகத்தில் 2010 ஆம் ஆண்டு வரை 100% தமிழ் மாணவர்களே இருந்து வந்தனர். அதன் பின்னரான காலப்பகுதியில் தமிழ் மாணவர்களின் வீதமானது படிப்படியாகக் குறைந்து தற்பொழுது 50% ஐ எட்டியுள்ளது. கலைப்பீடத்தைப் பொறுத்த அளவில் தமிழ் மாணவர்களின் வீதாசாரம் 100% ஆக இருந்தாலும் கணித விஞ்ஞான பாடங்களை அடிப்படையாக கொண்ட துறைகளில் தமிழ் மாணவர்களின் தொகை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து கொண்டே செல்கின்றது. உதாரணமாக பௌதீக விஞ்ஞானத் துறையில் தற்பொழுது 29% ஆன தமிழ் மாணவர்களே கல்வி கற்கின்றனர்.




Fig.3: கடந்த 8 வருடங்களில் யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களின் வீதம் எப்படி குறைவடைந்து செல்கின்றது என்பதை இவ்வரைபு காட்டுகின்றது.

தமிழ் மாணவர்களின் வீதமானது உயிரியல் விஞ்ஞான துறையில் 33% ஆகவும், பொறியியல் துறையில் 39% ஆகவும் தற்பொழுது காணப்படுகின்றது.

Fig.4: கடந்த 8 வருடங்களில் யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள பௌதீக விஞ்ஞானத் துறையில் எவ்வாறு தமிழ் மாணவர் வீதம் குறைந்து செல்கின்றது என்பதை இவ்வரைபு காட்டுகின்றது. தற்பொழுது தமிழ் மாணவர்களின் வீதம் 29.5% ஆக காணப்படுகின்றது.



இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் கணிதம் விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலப்பாடங்களை வீடியோ பாடங்களாக கற்கின்றார்கள். இப்பாடங்கள் USB நினைவகங்கள் மூலம் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு e-கல்வி நிலையத்திற்கும் மடிக்கணணிகள் (Laptop), டேப்லெட்(Tablet) கணனிகள், மல்டிமீடியா புரொஜெக்டர்கள், லேசர் பிரிண்டர்/போட்டோ கொப்பியர்கள் (Multifunction copiers) வழங்கப்படுகின்றன.




Fig.7. e-கல்வி நிலையங்களுக்கு வழங்கப்படும் மல்டிமீடியா உபகரணங்கள்

இப்பாடங்களை மாணவர்கள் தாமாகவோ அல்லது உதவியாளர்கள் உதவியுடனோ கற்க முடியும். இவற்றிற்குப் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தேவை இல்லை. இவற்றைக் கற்பதற்கு இணையம் தேவையில்லை என்பது முக்கியமான ஒரு விடயம்.

இதுவரை வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் 21 e-கல்வி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மேலும் 4 e-கல்வி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. கடந்த க.பொ.த (சா/த) பரீட்சையில் பல e-கல்வி நிலையங்கள் சிறந்த பெறுபேறுகளை ஈட்டியுள்ளன. இதன் பயனாக உயர்தரத்தில் கணிதம் விஞ்ஞானம் சார்ந்த துறைகளில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக புள்ளி விபரங்களை e-கல்வி திட்ட தொடர்பாளரரினால் வெளியிடப்பட்ட e-கல்வி திட்ட அறிக்கையில் காணலாம்.